**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 5/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | **திருமதி. முத்துலெட்சுமி** |
| Father's Name/Husband Name: | **திரு. காசிநாதன்** |
| Village : | கீழப்பெரம்பலூர் |
| Taluk : | **குன்னம்** |
| Age : | 45/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 25.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரிகள் 2 மற்றும் 4 ஆஜர். எதிரி 1 ஆஜர் இல்லை. அவருக்காக 317 குவிமுச மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி 3 இறந்து விட்டார். அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது.)**
**முதல் விசாரணை**

நான் தற்போது கீழப்பெரம்பலூர் கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கரும்பாயிரம் எனது சகோதரர். எதிரிகளை தெரியும். கடந்த 22.08.2019ம் தேதியன்று மாலை 6.30 மணியளவில் நான் என் வீட்டிலிருந்த போது என்னுடைய சகோதரர் முருகன் என்பவர் என்னுடைய தம்பி கரும்பாயிரத்தை எதிரி வகையறாக்கள் கொடுவாளால் வெட்டி காயத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், அவரை பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்து இருப்பதாக வரப்பெற்ற தகவலின் பேரில் மருத்துவமனை சென்று பார்த்த போது அ.சா.1 தலையில் வலது பக்கத்திலும் வலது பக்க தோள்பட்டை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு சிகிச்சையில் இருந்தார். போலிசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது சம்பவத்தன்று நான் ஊரில் இல்லை. எத்தனை மணிக்கு தகவல் கிடைத்து மருத்துவமனைக்கு சென்றேன்

என்றால் மாலை 7 மணியளவில் தகவல் கிடைத்து 9 மணியளவில் நான் சென்று பார்த்தேன். நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது போலிசார் எனது தம்பியை விசாரித்துக் கொண்டிருந்தார்கள். எனது தம்பி போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார். மறுநாள் காலை 9 மணியளவில் எங்கள் ஊருக்கு வந்து என்னை விசாரணை செய்தார்கள். அ.சா.1 எனது தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.